CENTURY Promise

CENTURYPLY



# SCAN KARO BEFIKAR RAHO

## செஞ்சுரி பிராமிஸ் ஆப் என்பது என்ன?

சந்தையில் ஏராளமான போலி பிளைவுட்கள் கிடைக்கின்றன. இப்பிரச்சனையை எதிர்கொள்ள இந்த நாட்டிலேயே முதன்முறையாக செஞ்சுரி பிளை தன் அனைத்து பிளை போர்டுகளிலும் தனிப்பட்ட QR கோடை ஒருங்கிணைத்துள்ளது. இந்த QR கோடை ஸ்கேன் செய்வதற்கு செஞ்சுரி பிராமிஸ் ஆப்பை பதிவிறக்கம் செய்து கொள்ளவும். ஸ்கேன் செய்யப்பட்டதும், ஒரிஜினல் செஞ்சுரி பிளைவுட்டா அல்லது போலியா என்பதை QR கோட் காட்டி விடும். அத்துடன், அந்தப் பிளைவுட் தயாரிக்கப்பட்ட தொழிற்சாலையின் விவரங்களையும் அது காட்டிவிடும். இந்த ஆப்பில் நீங்களோ அல்லது உங்கள் வாடிக்கையாளரோ வாங்கிய பொருளுக்கான இ-வாரண்ட்டி சான்றிதழையும் பதிவிறக்கம்செய்துகொள்ளலாம்.

## செஞ்சுரி பிராமிஸ் ஆப்பை எப்படி பயன்படுத்துவது

### படி 1:

இந்த ஆப்பை ஆண்டிராய்ட் ஃபோன் என்றால் பிளே ஸ்டோரிலிருந்தும், ஆப்பிள் ஃபோன் என்றால் ஆப் ஸ்டோரி
லிருந்தும் டவுன்லோட் செய்து உங்கள் ஸ்மார்ட் ஃபோனில் நிறுவிக் கொள்ளவும். உங்கள் ஸ்மார்ட் ஃபோனின் ஹோம் ஸ்க்ரீனிலுள்ள ஆப் ஐகானை தட்டி ஆப்பை தொடங்கலாம்.

ஆப் ஹோம் ஸ்க்ரீனில் 'Scan QR code'-ஐ தேர்வு செய்துகொள்ளவும். 'Upload QR code'தேர்வையும் நீங்கள் தேர்வு செய்து கொள்ளலாம்.

### படி 2:

உங்கள் ஸ்மார்ட்ஃபோனை பிளைவுட்டில் உள்ள QRcode ஐ நோக்கி வியூஃபைண்டர் செவ்வகத்துக்குள் QR code அமையுமாறு காட்டவும்.
உங்கள் ஸ்மார்ட்ஃபோன் கேமரா QR code ஐ ஸ்கேன் செய்யத் தொடங்கும். ஸ்கேன் செய்து முடிப்பதற்கு பல வினாடிகள் ஆகலாம்.

### படி 3:

அது உண்மையான செஞ்சுரி பிளை தயாரிப்பாக இருந்தால், தயாரிப்பு விவரங்களுடன் 'உண்மையான செஞ்சுரி பிளை தயாரிப்பு' என்கிற வார்த்தை இருக்கும்.
தயாரிப்பு விவரங்கள் தயாரிப்பின் பெயர், தொழிற்சாலையின் பெயர், பருமன், அளவு, தயாரிப்பின் தேதி மற்றும் தனிப்பட்ட குறியீடு ஆகியவற்றைக் கொண்டிருக்கும்.
இ-வாரண்ட்டியை உருவாக்கி பதிவிறக்கம் செய்துகொள்ளும் வசதியும் உண்டு.
சலுகைகளையும் விளம்பரங்களையும் காணலாம் மற்றும் ஆப்பின் மூலமாக உங்கள் பின்னூட்டையும் பகிரலாம்.

ஆப் டுடடோரியலயையும் இங்கே நீங்கள் பார்க்கலாம்-
**https://www.youtube.com/watch?v=efa-PlhMANo**

## QR codes உடைய செஞ்சுரி பிளை பிளைபோர்டுகள் கூடுதல் விலை கொண்டதா?

இல்லை. QR codes உடைய செஞ்சுரி பிளை தயாரிப்புகள் எந்தக் கூடுதல் விலையுமின்றி கிடைக்கின்றன.

## செஞ்சுரி பிராமிஸ் ஆப் இலவசமானதா அல்லது கட்டணம் உண்டா?

செஞ்சுரி பிராமிஸ் ஆப்பைஎந்தக் கட்டணமுமின்றி இலவசமாக டவுன்லோட் செய்துகொள்ளலாம்.

## எந்த செஞ்சுரி பிளை தயாரிப்புகள் QRcodes உடன் வருகின்றன?

செஞ்சுரி கதவு மற்றும் செஞ்சுரி பிளையின் அனைத்து பிளைபோர்ட் தயாரிப்புகளும் QR codes உடன் வருகின்றன.

## இ-வாரண்ட்டி சான்றிதழை பெறுவது எப்படி?

அனைத்து பிளைவுட்டையும் ஸ்கேன் செய்த பின்பு உங்கள் ஃபோனிலேயே பதிவிறக்கம் செய்து கொள்ளக்கூடிய இ-வாரண்ட்டி சான்றிதழை உருவாக்க முடியும் . அதை உங்கள் பதிவு செய்யப் பட்ட ஈ-மெயில் ஐடிக்கு அனுப்பலாம்.

## செஞ்சுரி பிராமிஸ் ஆப்பை பிளைவுட் டீலர்களும் காண்டிராக்டர்களும் பயன்படுத்த முடியுமா?

ஆம். செஞ்சுரி பிராமிஸ் ஆப்பை வாடிக்கையாளர்கள், டீலர்கள், சில்லறை விற்பனையாளர்கள், காண்டிராக்டர்கள் ஆகியோரும் பயன்படுத்தலாம். வாடிக்கையாளர்கள் தாங்கள் வாங்கிய பிளைபோர்டின் உண்மைத் தன்மையை கண்டறியவும், இ-வாரண்ட்டி சான்றிதழையும் பதிவிறக்கம் செய்யவும், சமீபத்திய சலுகைகள் மற்றும் விளம்பரங்களை அறிந்துகொள்ளவும் அதனைப் பயன்படுத்திக்கொள்ளலாம். டீலர்கள், காண்டிராக்டர்கள், சில்லறை விற்பனையாளர்கள் ஆகியோர் முறையான ஆவணங்களுடன் ஆப்பில் பதிவுசெய்துகொண்டு, தங்கள் தயாரிப்புகளின் உண்மைத் தன்மை குறித்து வெளிப்படையாக இருப்பதன் மூலம் வாடிக்கையாளர்களின் நம்பிக்கையைப் பெறுவதுடன் இ-வாரண்ட்டி சான்றிதழையும் வாடிக்கையாளர்களுக்கு அளிக்கலாம்.

## காண்டிராக்டர்களுக்கு செஞ்சுரி பிராமிஸ் ஆப் பயனுள்ளதா?

ஆம். செஞ்சுரி பிராமிஸ் காண்டிராக்டர்களுக்கு எந்த வகையில் நன்மையளிக்கிறது என்பதை அறிந்துகொள்ள இந்த விடியோவைப் பாருங்கள் -
**https://www.youtube.com/watch?v=nHxiMHN8FP0**

## நான் வாங்கியது உண்மையான செஞ்சுரி பிளை தயாரிப்பு இல்லை யெனில் என்ன செய்வது?

QR code ஐ ஸ்கேன் செய்ததும் அது உண்மையான செஞ்சுரி பிளை தயாரிப்பு இல்லையென்று தெரியவந்தால், உங்கள் விற்பனையாளரைத் தொடர்புகொண்டு உங்கள் ஆவணங்களையும் விற்பனை விவரங்களையும் சரிபார்க்கவும்.